# சித்தர்கள் கண்ட ஞானம்

முனைவர் செ.த.சுமதி மேத்திய அருமை
தமிழ் இணைப் பேராசிரியர்
காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை 600002.

41

**ஆய்வு சுருக்கம்:**
சித்தன் என்போர் இறைவனை அறிவதற்கு துணை புரியும் உன்னதர்கள். சித்தனின் ஞானம் என்பது உலக அறிவை இவ்வுலகில் வாழும் உயிர்கள் தூய்மை அடைய உறுதுணை செய்வதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

**திறவுச்சொற்கள்:** இடைக்காட்டுச் சித்தர் -இடைக்காட்டூர் என்னும் ஊரில் இடையர் குலத்தில் தோன்றியவர்.

யோகி- சைவம், வைணவம், பௌத்தம், சமணம் போன்ற சமயங்களில் சொல்லப்படும் சொல், யோகக்கலையைப் பின்பற்றும் சன்னியாசி

ஞானவெட்டியான்- அறிவுநெறியைக் காட்டுகிறவன்., ஞானத்தை வெட்டியான் ஒருவன் உயர்ந்த நிலையில் கூறுதல்.

சன்மார்க்கம்- ஒரே கடவுளின் கொள்கைகளைப் பின்பற்றுதல்., சன்-சத்-உண்மையான மெய், மார்க்கம் -வழி

ஞானம் - தெளிவான, ஆன்மீக, ஆழ்ந்த இறைப்பக்தியைக் குறிப்பது

காயசித்தர்- உடலை நரைதிரையின்றி நெடுநாள் இருக்கச் செய்யும் சித்திவல்லமைப் பெற்றவர்.

**முன்னுரை**

சித்தர்கள் என்போர் உலக அறிவையும் சுய கட்டுப்பாட்டையும் கொண்டவர்கள். நம் தமிழகத்தில் கி.மு காலத்திலேயே அகத்தியர், திருமூலர் போன்ற சித்தர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். தனி மனிதன் கூறும் இறைக் கருத்துக்கும் சித்தர்களின் இறைக் கருத்துக்கும் வேறுபாடுகள் அதிகமாகும். தனி மனிதன் இறைவனிடம் வாழ்வதற்குரிய அடிப்படை தேவைகளை முன்னிட்டு அவன் யாசகம் இறைவனிடம் கேட்கப்படும். ஆனால் சித்தர்களோ மனித சமுதாயம் காணும் துன்பங்களை போக்குவதற்காக அறிவினை இறைவனிடம் இருந்து பெற்று தந்தனர். இனி வரும் இக்கட்டுரையில் சித்தர்கள் கண்ட ஞானம் குறித்து காண்போம்.

**சித்தர்கள்**

சித்தர் என்பவர் என்போர் யோகத்தில் வாழ்ந்து யோகத்தின் வழியாக தெய்வீக ஆற்றலையும், ஒளியையும் காண்கின்றார்களோ அவர்களே சித்தர்கள் என்று திருமூலர் தன் திருமந்திரத்தில் 1490

வது பாடலில் தெரிவிக்கிறார். தன் சுய முயற்சியில் பூரணத்தை அடைய சுய சோதனை செய்யும் யோகியே சித்தர் என்கிறார் சிவவாக்கியர். அகத்தியர், திருமூலர், பாம்பாட்டிச் சித்தர், கருவூரர், போகர், சிவவாக்கியர்,

இடைக்காட்டுச் சித்தர், குதம்பைச் சித்தர், கடுவெளிச் சித்தர் இவர் போன்ற 18 சித்தர்களாவர்.

சித்தர்களின் கொள்கைகள் பரம்பொருள் என்பது தனியாக இல்லை. நம் உடம்போடு இணைந்திருப்பது. ஆதலால் கடவுளைத் தேடி எங்கும் அலைய வேண்டாம்.

" உன்னுள்ளம் இருப்பான்
என் உள்ளம் இருப்பான்
உருவம் இல்லா உண்மை அவன்
இதை உணர்ந்தார் இங்கே உலவுவதில்லை
தானும் அடைவார் அந்நிலை தன்மை"

சித்தர்கள் பின்பற்றிய கொள்கை வழி மூன்று வகைப்படுவர் .

திருமூலர், போகர் போன்றோர் சன்மார்க்க சித்தர்கள்.

பட்டினத்தார், பத்திரகிரியார், சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகண்ணர், இடைக்காட்டுச் சித்தர், போன்றோர் ஞான சித்தர்கள் ஆவர் .

கோரக்கர் ,கருவூரர், மச்சமுனி, சட்ட முனி, சுந்தரானந்தர் , உரோமுனி போன்றோர் காயச் சித்தர்கள் ஆவர்.

பட்டினத்தாரின் வாழ்வின் நிலையாமை குறித்த ஞானம்

"முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டபின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னிஅம்பலவர்
அடிசார்ந்து நாம் உய்ய வேண்டும் என்று அறிவாரில்லையே " (திரும்ப மாலை 50வது பாடல்)

அரசாலும் மன்னனும் சாதாரண மனிதனும் இறந்த பின்பு பிடி சாம்பல் கூட கிடைக்காமல் போவது உலக நியது வாழ்வின் உண்மை மனித உடல் அழியக்கூடியது நிலையில்லாத வாழ்வு கொண்டது என்று வாழ்வின் இயல்பை நிலையாமை கொள்கையை மனிதனுக்கு எடுத்துரைத்தவர் பட்டினத்தார். பட்டினத்தாரின் ஞானம் மண்ணாசை, பெண் ஆசை, பொன்னாசை ஒவ்வொரு மனிதனும் கொள்ளக்கூடாது. உடல் அழியக் கூடியது என்பதை உலகுக்கு உணர்த்தி வாழ்வின் நிலையாமை ஞானத்தை வழங்கியவர்.

ஞானவெட்டியானின் ஞானம்

"இஞ்சியிட மஞ்சள் உண்டோ? ஏலம் இடச்சுக்காமோ?
நஞ்சுகந்த எட்டியிலும் நல்ல எலு மிச்சைஉண்டோ ?
துஞ்சுபுகழ் பூசை செய்யும் சுந்தரரே என்குலத்தில்
வஞ்சியை நீர் சேர்ந்தனால் மைந்தன் தரியாதோ?

இஞ்சியைப் பயிரிட்டால் மஞ்சள் விளையுமா ? ஏலம் பயிர் செய்தால் சுக்கு விளையுமா? விஷத்தன்மை பொருந்திய எட்டி மரத்தில் நல்ல எலுமிச்சம் பழம் தோன்றுமா? இஞ்சி இட்டால் இஞ்சியும், ஏலம் பயிரிட்டால் ஏலமும், எட்டி மரத்திலே எட்டிக்காயும்தான் விளையும். மிகுந்த பூசை செய்யும் சுந்தரரே, என் குலத்துப் பெண்ணை நீர் சேர்ந்தால் மைந்தன் பிறக்க மாட்டானா? ஆதலால் உனக்கும் எனக்கும் வேற்றுமை ஏது? ஒரு சிறிதும் இல்லை. மனித குலம் ஒன்றே. மனிதனுக்கு மனிதன் சமம். எக்குலமும் ஒன்றுதான் என்பதை ஞானவெட்டியானின் ஞானம் உலகுக்கு உணர்த்துகிறது.

**பாம்பாட்டிச் சித்தரின் குரு ஞானம்**

"வேதப்பொருள் இன்னவென்று வேதம் கடந்த
மெய்ப்பொருளை கண்டுமனம் மேவ விளம்பிப்
போதப்பொருள் இன்னதென்றும் போதனை செய்யும்
பூரணசற் குருநாதன் கண்டு ஆடாய் பாம்பே!(12வது பாடல்)

உண்மையான குருமார்களைக் கண்டு வேதத்தின் தெளிவான பொருளை அறிந்தவர்கள். வேதத்தையும் கடந்து நிற்கும் மெய்ப்பொருளை கண்டறிந்தவர்கள். உண்மையை நம் உள்ளத்திலே பதியும்படி தெளிவாக அறிவிக்க கூடியவர்., ஐயத்திற்கு இடம் இல்லாமல் தெளிவாக போதனை செய்யக்கூடியவர் தான் உண்மையான குருநாதன் என்ற பாம்பாட்டி சித்தர் தம் பாடலில் குருவின் ஞானத்தை குறிப்பிடுகிறார்.

**இடைக்காட்டுச்சித்தரின் மெய்ப்பொருள் ஞானம்**

மனதை கட்டியாண்டால் நமக்கு விடுதலை கிடைக்கும் என்றும், கொடிய பாம்பு என்னும் சினத்தை மடிந்தால்தான் நாம் நினைப்பனவெல்லாம் இனிதே நடந்தேறும். ஆசை என்பது அடங்காத பசு. பசுவின் அடங்காத தன்மையை ஒடுக்க ஆசையை தன் கட்டுக்குள் அடக்கி விட்டால் இந்த உலகத்தில் உள்ள உண்மைகள் முழுமையும் கண்டறிய முடியும் என்று மனம், சினம், ஆசையை ஒவ்வொரு மனிதனும் அழித்து, அடக்கி, கட்டுக்குள் கொண்டு வந்தால் மட்டுமே உலக உண்மையைக் கண்டு அறிய முடியும் என்று இடைக்காட்டு சித்தரின் ஞானமாக உள்ளது.

மனம் என்னும் மாடு அடங்கில் தாண்டவக் கோனே - முத்தி

வாய்ந்தது என்று எண்ணேடா தாண்டவக்கோனே.( தாண்டவராயக் கோனார் கூற்று 13 வது கண்ணி )

**சிவவாக்கியரின் இறை ஞானம்**

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த சோதியை

நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்

வாடி வாடி வாடி வாடி மாண்னடுபோன மாந்தர்கள்

கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே (3வது பாடல்)

சிவவாக்கியர் உடம்பில் உள்ளே ஒளியாக கலந்துள்ள இறை ஒளியை உணர்ந்து கொள்ளாத மனிதர்கள் கோவில்களிலும், அண்டங்களிலும், பல்வேறு இடங்களிலும், தேடி கடைசியில் இறைவனை காணாமலே இறந்து போகின்றனர் என்று கூறுகிறார்.

நம் மனதில் உள்ளே வாழுகின்ற இறைவனை காணாமல் எங்கெங்கோ தேடி இறுதியில் இறைவனை காணாமல் இறந்து போகும் மனிதர்களை கண்டு வேதனை உற்று இறைவன் என்பவன் நம் மனதின் கண் வாழ்பவன் என்பதை உணர்த்துகிறார்.

**திருமூலரின் இறை ஞானம்**

“அண்ணன் அருளால் அருளும் சிவாகமம்

விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது

அண்ணல் அறைந்த அறிவறி யாவிடில்

எண்ணிலி கோடியும் நீர்மே லெழுத்தே(பாடல் எண் 70)

திருமூலரின் இறைஞானம் என்பது சிவபெருமான் திருவருளால் அருளி செய்த சிவாகமம் அயன், மால் உள்ளிட்ட தேவர்களாலும் விளங்கிக் கொள்ள முடியாத அருமையானதாகும். சிவ ஆகமங்களின் சிவபெருமான் அருள் செய்த மறைபொருள் உண்மை கைவரச் செய்யும். சிவ உணர்வை உண்மை மெய்ப்பொருளை உணராவிடின் நீரின் மீது எழுதப்பட்ட எழுத்து போல ஆகிவிடும். ஆதலால் ஆகம பொருளை இறைஞானம் கொண்டு உணர்தல் வேண்டும் என்று திருமூலர் உணர்த்துகிறார்.

**முடிவுரை**

இவ்வாறு சித்தர்களின் ஞானமானது வாழ்வின் நிலையாமை, உண்மை பொருள், குருவின் சிறப்பு, ஐம்புலன்களை அடக்குவது, இறைப் பொருளை வேதத்தின் துணையோடு உணர்ந்து கொள்வது, இறைஞானம் மனிதனின் மனதோடு தொடர்புடையது என்பது போன்ற பல்வேறு பொருட்களை இவ்வாய்வு கட்டுரை எடுத்து இயங்குகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1.சித்தர் பாடல்கள் மூலமும் உரையும் – உரையாசிரியர் இளமுனைவர் தமிழ்ப்பிரியன், கற்பகம் புத்தகாலயம், சென்னை -17., பதிப்பு பிப்ரவரி -2021.

2.சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் -சாமி சிதம்பரனார்,இந்து சமய அறநிலையத்துறை, சென்னை-34 , மறுபதிப்பு, நவம்பர் 2022.

3.திருமந்திரத்தில் வியத்தகு உவமைகள் -பேரா.பு.சி.இரத்தினம், மணிமேகலைப் பிரசுரம், சென்னை -17, முதற் பதிப்பு 2010.